# மயிலாடுதுறை நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2021-2022

# மயிலாடுதுறை நகராட்சி

## 2021-2022 நிர்வாக அறிக்கை


| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | நகராட்சி அமைப்பும், நிர்வாகமும் | 3 |
| 2. | நிர்வாகம் | 4 |
| 3. | தேர்தல் | 5-7 |
| 4. | பொது நிர்வாக செலவு | 7 |
| 5. | விளக்குகள் வசதி, | 8 |
| 6. | குடிநீர் வழங்குதல் | 8 |
| 7. | சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள், பணிகள் | 9 |
| 8. | வருவாய் நிதி, குடிநீர் திட்டநிதி 2021–2022 | 10 |
| 9. | பாதாளசாக்கடை திட்டநிதி 2021–2022 | 11 |
| 10. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2021-2022 மற்றும் கலைஞர் நகர்புற மேம்பாட் திட்டம் 2021–2022 | 12 |
| 11. | SDRF நிதி | 13 |
| 12. | பாதாள சாக்கடை திட்டம் பற்றிய குறிப்பு | 14 |
| 13. | 15-வது மத்தியநிதி குழு திட்டம் 2021-2022 | 15-17 |
| 14. | பொது சுகாதாரம் | 17-19 |
| 15. | காய்கனி மற்றும் மீன் சந்தைகள் | 19 |
| 16. | பேருந்து நிலையம் மற்றும் வசதிகள் | 19-20 |
| 17. | வணிகவளாகங்கள், | 20 |
| 18. | ஓராண்டு குத்தகை இனங்கள் | 21 |
| 19. | தொழிற்சாலைகள் | 22 |
| 20. | பூங்காக்களும், பொழுதுபோக்கு வசதிகள் | 22 |
| 21. | நகரமைப்பு நிர்வாகம் | 22-23 |
| 22. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் | 24 |
| 23. | வழக்குகள் | 25 |
| 24. | வரி இனங்கள் | 25 |
| 25. | கடன்கள் | 26 |
| 26. | கணிப்பொறி பிரிவு | 26-27 |
| 27. | முதலீடுகள் | 27 |
| 28. | பாதாள சாக்கடைத்திட்டம் | 27 |
| 29. | பொது | 28 |

# மயிலாடுதுறை நகராட்சி

# 2021-2022ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. நகராட்சி அமைப்பும் நிர்வாகமும்:-

கி.பி. 12ம் நூற்றாண்டுவரை மயிலை என்றழைக்கப்பட்டு ‘‘மாயூரபுரம்’’ என்றாகி பின்னர் மாயூரம் என மருவி கி.பி.18 ஆம் நூற்றாண்டு முதல் ‘‘மாயவரம்’’ எனவும் 1948 முதல் மாயூரம் என்று அழைக்கப்பட்டு வந்த இந்நகரம் தமிழக அரசின் வருவாய்த்துறை அரசாணை எண். 974 நாள் 08.06.1982ன்படி மயிலாடுதுறை என பெயர் மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டு 27.06.1982 முதல் மயிலாடுதுறை என்றாகியுள்ளது. இந்நகராட்சி 1866 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இந்நகரம் ‘‘தள்ளா விளையும் தக்காரும் தாழ்விலாச் செய்வரும் சேர்வது நாடு’’ என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க அமையப்பெற்ற நகரமாகும். 2016ம் ஆண்டு 150வது ஆண்டினை எட்டிடும் பழைமை புகழ்வாய்ந்த நகராட்சியாகும்.

1).ஏற்கனவே மயிலாடுதுறை நகராட்சி ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருந்தது. தஞ்சை மாவட்டத்திலிருந்து நாகப்பட்டினத்தை தலைநகராகக் கொண்டு 18.09.1991 முதல் நாகப்பட்டினம் மாவட்டம் பிரிக்கப்பட்ட போது இந்நகராட்சி நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமையப்பெற்றது. தற்போது அரசாணை எண்.G.O(MS) No.796 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள்:28.12.2020–ன்படி நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து மயிலாடுதுறை தலைநகராக கொண்டு பிரிக்கப்பட்டு மயிலாடுதுறை தனி மாவட்டமாக 28.12.2020 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.498, 22.03.1984ந் தேதியிட்ட அரசாணையின்படி 28.03.1984ம் தேதி முதல் தேர்வுநிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 11.27 சதுரகிலோ மீட்டர்களாகும்.

**இந்நகராட்சி எல்லைக்குள் கீழ்க்கண்ட வருவாய் கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன.**

1. கூறைநாடு முழுவதும்
2. பண்டாரவாடை மாப்படுகை (பகுதி)
3. திருவிழந்தூர்
4. சித்தர்காடு (பகுதி)
5. பட்டமங்கலம்
6. மயிலாடுதுறை
7. வள்ளலாகரம்
8. மன்னம்பந்தல் (பகுதி)

1991-ம் ஆண்டு மக்கள் தொகை ஆண்கள் 38730 பெண்கள் 38107 மொத்தம் 76837
2001-ம் ஆண்டு மக்கள் தொகை ஆண்கள் 42008 பெண்கள் 42497 மொத்தம் 84505
2011-ம் ஆண்டு மக்கள் தொகை ஆண்கள் 41917 பெண்கள் 43682 மொத்தம் 85599

## 2. நிர்வாகம்:-

**அ) ஆணையர்:-**

அறிக்கை ஆண்டில் திரு.கா.சுப்பையா, ஆணையாளர், 01.04.2021 முதல் 20.07.2021 முற்பகல் வரை பணிபுரிந்து வந்துள்ளார். திரு.எல்.குமார், நகராட்சி பொறியாளர், 21.07.2021 முதல் 06.08.2021 வரை ஆணையரராகப் பொறுப்பு வகித்துள்ளார். திருமதி.சி.அம்பிகா, கணக்கர் 06.08.2021 பிற்பகல் முதல் 11.08.2021 வரை ஆணையரராகப் பொறுப்பு வகித்துள்ளார். திரு.க.பாலு, ஆணையாளர் 12.08.2021 முற்பகல் முதல் 31.03.2022 வரை ஆணையராகப் பணிபுரிந்துள்ளார்.

**ஆ) பொறியாளர்:-**

அறிக்கை ஆண்டில் திரு.எல்.குமார், நகராட்சி பொறியாளராக 01.04.2021 முதல் 06.08.2021 வரை பணிபுரிந்து வந்துள்ளார். திரு.எம்.ராமலிங்கம், நகரமைப்பு அலுவலர், 07.08.2021 முதல் 22.08.2021 வரை பொறியாளராக பொறுப்பு வகித்துள்ளார். திரு.ர.சனல்குமார், நகராட்சி பொறியாளராக 23.08.2021 முதல் 31.03.2022 வரை பணிபுரிந்து வருகிறார்.

**இ) நகர்நல அலுவலர்:-**

இந்நகராட்சியில் திரு.என்.பிச்சைமுத்து, துப்புரவு ஆய்வாளர் 01.04.2021 முதல் 09.05.2021 வரை நகர்நல அலுவலராகப் பொறுப்பு வகித்துள்ளார். மருத்துவர். திரு. K.S. மலர்மண்ணன், 10.05.2021 முதல் 31.03.2022 வரை நகர்நல அலுவலராகப் பணிபுரிந்துள்ளார்.

**ஈ) மேலாளர்:-**

திரு.ஜி.ஆர்.சூரியபிரகாஷ் 01.04.2021 முதல் 31..03.2022 வரை மேலாளராகப் பணிபுரிந்துள்ளார்.

**உ) கணக்கர்:-**

திருமதி.சி.அம்பிகா, 01.04.2021 முதல் 31.03.2022 வரை கணக்கராகப் பணிபுரிந்து வருகிறார்.

**ஊ) வருவாய் அலுவலர்:-**

திருமதி..எஸ்.செல்வி, 01.04.2021 முதல் 31.03.2022 வரை வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

**எ) நகரமைப்பு அலுவலர்**

திரு.எம்.ராமலிங்கம், 01.04.2021 முதல் 25.11.2021 வரை நகரமைப்பு அலுவலராகப் பணிபரிந்துள்ளார். திருமதி.கே.விஜயலெட்சுமி, உதவிப்பொறியாளர் 26.11.2021 முதல் 07.12.2021 வரை நகரமைப்பு அலுவலராகப் பொறுப்பு வகித்துள்ளார். திரு.கே.இராஜேந்திரன், 08.12.2021 முதல் 31.03.2022 வரை நகரமைப்பு அலுவலராகப் பணிபுரிந்து வருகிறார்.

## 3. தேர்தல்:-

### 1) தனி அலுவலர்கள் பொறுப்பு

01.04.2021 முதல் 20.07.2021 முற்பகல் வரை திரு.கா.சுப்பையா, ஆணையாளர் கூடுதலாக தனிஅலுவலர் பொறுப்புகளை கவனித்து வந்தார். 21.07.2021 முதல் 06.08.2021 வரை திரு.எல்.குமார், நகராட்சி பொறியாளர், ஆணையரராகப் பொறுப்பு கூடுதலாக தனிஅலுவலர் பொறுப்புகளை கவனித்து வந்தார். 06.08.2021 பிற்பகல் முதல் 11.08.2021 வரை திருமதி.சி.அம்பிகா, கணக்கர் ஆணையரராகப் பொறுப்பு கூடுதலாக தனிஅலுவலர் பொறுப்புகளை வகித்துள்ளார். 12.08.2021 முற்பகல் முதல் 02.03.2022 வரை திரு.க.பாலு, ஆணையாளர் கூடுதலாக தனிஅலுவலர் பொறுப்புகளை கவனித்து வந்தார்.

### 2) நகர்மன்ற தேர்தல்

மயிலாடுதுறை நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் 19.02.2022–ஆம் தேதியில் நகராட்சிகுட்பட்ட 36 வார்டுகளில் 35 வார்டுகளுக்கு தேர்தல் நடைபெற்றது. வார்டு எண்.19ல் அரசியல் கட்சி வேட்பாளர் காலமாகிவிட்டதால் தேர்தல் நடைபெறவில்லை.

நகராட்சியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 35 நகர்மன்ற உறுப்பினர்கள் 02.03.2022 புதன்கிழமை அன்று பதவியேற்றுக்கொண்டார்கள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி நகர்மன்றத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தேர்தல் கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் பிற்பகலில் நகர்மன்ற துணைத்தலைவர் தேர்தல் நடைபெற்றது.

**மயிலாடுதுறை நகராட்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| 1. | **திரு.நா.செல்வராஜ்<br>நகர்மன்ற தலைவர்** |
| 2. | **திரு. ச.சிவகுமார்<br>நகர்மன்ற துணைத்தலைவர்** |
| 3. | திருமதி.ர.ஜெயந்தி<br>1–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 4. | திரு.ச. கணேசன்<br>2–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 5. | திருமதி..ர.கல்யாணி<br>3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 6. | திரு.ரா.ரமேஷ்<br>5–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 7. | திரு.து.ருஷிக்குமார்<br>6–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 8. | திருமதி.ம.மணிமேகலை<br>7–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 9. | திருமதி.இரா.இராஜலெட்சுமி<br>8–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 10. | திரு.ஜெ.லிங்கராஜன்<br>9–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 11. | திரு.கே.ஜி. சம்பத்<br>10–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

| | |
|---|---|
| 12. | திரு.ரெ.சபா<br>11–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 13. | திருமதி.அ.ஹேமாவதி<br>12–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 14. | திரு.ச.ரெத்தினவேலு<br>13–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 15. | திருமதி.மு.தில்சாத் பானு<br>14–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 16. | திருமதி.உ.ஜெயந்தி<br>15–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 17. | திரு.செள.சர்வோதயன்<br>16–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 18. | திருமதி.த.காந்திமதி<br>17–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 19. | திரு.ச.காந்திராஜா<br>18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 20. | திருமதி.அ.தனலெட்சுமி<br>20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 21. | திருமதி.எஸ். உஷாராணி<br>22–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 22. | திரு.கு.சதீஷ்குமார்<br>23–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 23. | திருமதி.தெ.வளர்மதி<br>24–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 24. | திருமதி.க.சரோஜா<br>25-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 25. | திரு.அ.ராமச்சந்திரன்<br>26–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 26. | திருமதி.இ.கிருத்திகா<br>27–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 27. | திருமதி.மு.சுதா<br>28–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 28. | திரு.மா.ரஜினி<br>29–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 29. | திரு. மோ. சக்தி விஜய்<br>30–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 30. | திருமதி.மு.ஜெயலெட்சுமி,<br>31–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 31. | திருமதி. ச.இலக்கியா<br>32–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 32. | திரு.இரா. நடராஜன்<br>33–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 33. | திரு.ர.கார்த்திக்<br>34–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 34. | திரு.செ.செந்தில்குமார்<br>35–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 35. | திருமதி. ஆ.ஆனந்தி<br>36–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

<u>வரிமேல் முறையீட்டுக்குழு:-</u>

**01.04.2021 முதல் 01.03.2022 முடிய அறிக்கை ஆண்டில் தனி அலுவலரால் நடத்தப்பட்ட கூட்டங்களின் விபரம்.**

| வ. எண் | நடத்தப்பட்ட கூட்டங்களின் தன்மை | கூட்டங்களின் எண்ணிக்கை | முன் வைக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சாதாரணக் கூட்டம் | 10 | 185 | 185 |
| 2. | அவசரக்கூட்டம் | 6 | 14 | 14 |

**<u>3) நகர்மன்றக்குழுக்களின் கூட்ட நடவடிக்கைகள் விவரம்:-</u>**

| வ. எண் | குழுவின் பெயர் | கூட்டங்களின் எண்ணிக்கை | முன் வைக்கப் பட்ட பொருட்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஒப்பந்தக்குழு | - | - | - |
| 2. | உள்ளூர் திட்டக்குழு | - | - | - |
| 3. | நியமனக்குழு | | | |

**4) வரிமேல்முறையீட்டு குழு உறுப்பினர்கள்**

1. திருமதி.ஜெயந்தி ரமேஷ் – 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
2. திருமதி.ஜெயந்தி உதயகுமார் – 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
3. திரு.சக்திவிஜய் – 30 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
4. திரு.காந்திராஜா – 18 வது வார் நகர்மன்ற் உறுப்பினர்

**5) நிமனக்குழு உறுப்பினர்**

1. திரு.மா.ரஜினி – 29வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்

**6) ஒப்பந்தக்குழு உறுப்பினர்**

1. திருமதி.உஷாராணி ராஜேந்திரன் – 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்

## <u>4) பொது நிர்வாக செலவு:-</u>

இந்நகராட்சியில் பணியாற்றும் அனைத்துப்பிரிவு அலுவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, சிறப்பூதியம், இடைக்கால நிவாரணம், வாகனப்படி, மருத்துவப்படி, பிழைப்பூதியம், பிரயாணப்படி, ஓய்வூதியம், ஓய்வுகால சகாயத்தொகை மற்றும் படிவங்கள், புத்தகங்கள் வாங்குதல் போன்ற செலவினங்களுக்காக அறிக்கையாண்டில் ரூ.14,75,70,833/-ம் செலவிடப்பட்டுள்ளது.

## 5) விளக்குகள் வசதி:-

இந்நகராட்சியால் அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.:-

| | | 31.3.2021ல் | 31.3.2022ல் |
|---|---|---|---|
| 1 | 250 வாட்ஸ் மற்றும் 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 1012 | 1012 |
| 2 | 400 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 21 | 21 |
| 3 | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 171 | 171 |
| 4 | உயர் மின் கோபுர விளக்குகள் 400 வாட்ஸ் | - | - |
| 5 | அலங்கார மின்விளக்குகள் 250 வாட்ஸ் | - | - |
| 6 | T5 CFL விளக்குகள்+18 வாட்ஸ் CFL | - | - |
| 7 | 20 வாட்ஸ், 40 வாட்ஸ் மற்றும் 60 வாட்ஸ் LED விளக்குகள் | 2242 | 2242 |
| 8 | 250 வாட்ஸ் மற்றும் 400 வாட்ஸ் M.H | 39 | 39 |
| | **மொத்தம்** | **3485** | **3485** |

**அறிக்கை ஆண்டில் தெருவிளக்குகள் பராமரிப்புக்கான செலவு விவரம்:-**

1. தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் இதர படிகள்
2. தெருவிளக்கு இயக்குதல் பராமரிப்புக்கான பட்டியல் — ரூ.3278102/–
3. மின் விளக்குகள் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு மின் வாரியத்திற்கு கட்டணமாக செலுத்தப்பட்ட தொகை மற்றும் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்ட இதர நிர்வாக செலவு
4. விளக்குகள் பராமரிப்பு வாங்கப்பட்ட குழல் விளக்குகள் சோக்குகள், ஸ்டாட்டர்கள், ஒயர்கள் மற்றும் அதற்கான மின் உபகரணங்கள் வாங்கிய வகையில் ஏற்பட்ட செலவு — -

-----------------------

**மொத்தம் : ரூ.3278102/-**

-----------------------

## 6. குடிநீர் வழங்குதல்:-

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.11.00 கோடி செலவில் குடிநீர் வடிகால் வாரியத்துறை மூலம் 31.5.2002-ல் கட்டி முடிக்கப்பட்டு நகராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் செய்ய மாமரத்துமேடையில் 13.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள 2 நீர் தேக்க தொட்டியும், கே.கே.நகரில் 8.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு நீர்த்தேக்கத் தொட்டியும், பாரதி நகரில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கத்தொட்டியும் வரதாச்சாரியார் பூங்காவில் 25.00 லட்சம் லிட்டர் கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நகராட்சியில் தினசரி 68 லட்சம் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேற்கண்ட மேல்நிலை தொட்டிகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தினசரி காலை 6.00 முதல் 8.00 வரை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தினசரி நபர் ஒருவருக்கு 92 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

அறிக்கை ஆண்டின் முடிவில் 31.03.2022ல் மொத்தம் 10693 குழாய் இணைப்புகள் உள்ளன. இதில் வீட்டு பயன்களுக்காக குடிநீர் இணைப்பு 10384ம் வணிக உபயோகத்திற்காக 309 ஆகும்.

மேற்படி குடிநீர் குழாய் இணைப்புகள் மூலம் நகராட்சியால் அறிக்கை ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ.62,83,241/- வசூலிக்கப்பட்டுள்ளது. சொத்துவரியிலிருந்து குடிநீர் கணக்கு பங்கீட்டின்படி ரூ. 18,074,000/- கிடைக்கப்பெற்றது.

அறிக்கையாண்டில் 2 உதவிப்பொறியாளர், 2 பணி ஆய்வர்கள், 1 குழாய் ஆய்வர், 1 குழாய் பொருத்துனர் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

அறிக்கையாண்டில் குடிநீர்த்திட்ட பணியாளர்களுக்கான ஊதியம் அகவிலைப்படி, இடைக்கால நிவாரணத்தொகை ஆகியவை போன்ற இனங்களுக்காகவும் மற்றும் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகளுக்காகவும் மற்றும் அதற்கான மின் கட்டணம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.96,28,000/- செலவிடப்பட்டுள்ளது.

## 7) சாலைகள் பாலங்கள் மற்றும் கட்டிடங்கள்:-

மயிலாடுதுறை நகராட்சியின் மொத்த சாலைகளின் நீளம் 119.231 கிலோ மீட்டர் ஆகும்.

| வ.எண் | சாலை | நகராட்சி பராமரிப்பு |
|---|---|---|
| | | **2021-2022** |
| 1 | சிமெண்ட் சாலைகள் | 14.750 |
| 2 | தார் சாலைகள் | 103.36 |
| 3 | கருங்கல் ஜல்லி சாலை மற்றும் சரளை கப்பி சாலை | 2.560 |
| 4 | மண் சாலை | 1.200 |
| | **மொத்தம்** | **120.670** |

சாலைகள் அமைப்பு பராமரிப்பு மற்றும் கட்டிடங்கள் பராமரிப்பு ஆகிய நகராட்சிகளின் பொது வேலைகளை கவனிக்க 1 பொறியாளர், 2 உதவிப்பொறியாளர்கள், 2 பணி ஆய்வர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர்.

## 8. வருவாய் நிதி 2021–2022

மயிலாடுதுறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் 7 பணிகள் ரூ.37.00 இலட்ச மதிப்பீட்ப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 4 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளிலும் வேலை நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | நவீன எரிவாயு தகன மேடையில் LPG GAS மூலம் இயக்கும் பணி | ரூ.10.00 | ரூ.0 |
| 2 | நவீன எரிவாயு தகன மேடையில் புதியதாக சிம்னி பொறுத்தும் பணி | ரூ.10.00 | ரூ.0 |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் சேதமடைந்த சாலைகளை சீர் அமைக்கும் பணி. | ரூ.9.90 | ரூ.9.90 |
| 4 | மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார BOV வாகனங்கள் ஐந்து எண்ணிக்கை பழுது நீக்கம் செய்யும் பணி. | ரூ.6.00 | ரூ.5.70 |
| 5 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 23 கூறைநாடு, காந்திஜி சாலை செம்மங்குளம் அருகில் பழங்காவேரி அருகே பாதுகாப்பு அமைப்பு கட்டும் பணி | ரூ.1.60 | – |
| 6 | மயிலாடுதுறை நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படும் மையங்களுக்கு அடிப்படை வசதிகள் | ரூ.4.00 | ரூ.4.00 |
| 7 | மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார BOV வாகனங்கள் 5 எண்ணிக்கை பழுது நீக்கம் செய்யும் பணி. | ரூ.5.50 | ரூ.5.30 |
| 8 | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலைவிகிதப்படி பணியாளர்கள் சப்ளை செய்யும் பணி | ரூ.7.10 | ரூ.7.10 |
| 9 | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரினை பாதுகாப்பான முறையில் குளோரீனேசன் செய்வதற்கு தேவைப்படும் சோடியம் ஹைப்போ குளோரைடு கரைசல் சப்ளை செய்யும் பணி | ரூ.9.90 | – |

### 9. குடிநீர் திட்டநிதி 2021-2022

மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் 2 பணிகள் ரூ.17.00 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 2 பணி முடிக்கப்பட்டுள்ளது.

**10. பாதாள சாக்கடை திட்டநிதி 2021–2022**

மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் 9 பணிகள் ரூ.66.95 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 6 பணி முடிக்கப்பட்டுள்ளது . மீதமுள்ள பணிகளிலும் வேலை நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி பூம்புகார் சாலை, திருவாரூர் சாலை மற்றும் சீர்காழி சாலை பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த பாதாள சாக்கடை ஆழ்நுழைவு தொட்டிகளை சீரமைக்கும் பணி | ரூ.4.60 | ரூ.3.50 |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் எண் 4 அய்யாரப்பர் தெரு அருகில் பழுதடைந்த பாதாள சாக்கடை பிரதான குழாயினை மாற்றி அமைக்கும் பணி | ரூ.10.00 | – |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் எண் 4 ராஜேஸ்வரி திருமண மண்டபம் அருகில் பழுதடைந்த பாதாள சாக்கடை பிரதான குழாயினை மாற்றி அமைக்கும் பணி | ரூ.10.00 | – |
| 4 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாயில் கால் டாக்சி, பூம்புகார் சாலை, பெரியகடைவீதி மற்றும் ரேவதி நகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்யும் பணி | ரூ.5.00 | ரூ.4.70 |
| 5 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஜெனீபர் ஸ்வீட் ஸ்டால் அருகில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாயில் பழுது ஏற்பட்டதின் காரணமாக புதிய 600 MM DIA PIPE சப்ளை செய்யும் பணி | ரூ.5.00 | ரூ.5.00 |
| 6 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை ஆள்நுழைவு தொட்டிக்கு தேவையான EHD 35 Cover And Frame சப்ளை செய்யும் பணி | ரூ.4.20 | ரூ.3.80 |
| 7 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கண்ணாரத்தெரு சாலையில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாயில் ஏற்பட்டுள்ள பழுதினை சீர்செய்யும் பணி. | ரூ.8.25 | – |
| 8 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் படிந்துள்ள கசடுகளை அகற்றும் பணி. | ரூ.10.00 | ரூ.10.00 |
| 9 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண். 1 முதல் வார்டு எண்.36 வரை அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த ஆள்நுழைவு தொட்டிகளை சீர் செய்து சாலை மட்டத்திற்கு உயர்த்தும் பணி. | ரூ.9.90 | ரூ.9.50 |

## 11. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2021-2022

மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.13.20 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 3 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி துணை இயக்குநர் வேளாண்மைதுறை அலுவலக சாலை பகுதியில் சேதம் அடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி | ரூ.7.00 | ரூ.7.00 |
| 2 | மயூரநாதர் தெற்கு வீதியில் பாடசாலைக்கு அருகில் ஆழ்துளை கிணறுடன் சிறிய மின்விசைப் பம்பு அமைக்கும் பணி | ரூ.3.20 | ரூ.3.20 |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு நெ.1, ஆடியபிள்ளையார் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | ரூ.3.00 | ரூ.2.10 |

## 12. கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் திட்டம் 2021-2022

மயிலாடுதுறை நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் 4 பணிகள் ரூ.453.03 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | ரூ.194.70 | ரூ.120.10 |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி ராஜந்தோட்டத்தில் அறிவுசார் நூலகம் கட்டும் பணி | ரூ.200.00 | – |
| 3 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022–ன் கீழ் வண்ணான்குளம் TS.NO.4, Block No.39, Ward No.4 மேம்பாடு செய்யும் பணி | ரூ.146.50 | – |
| 4 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022–ன் கீழ் சேந்தங்குடிகுளம் TS.NO.177, Block No.10, Ward No.7 மேம்பாடு செய்யும் பணி | ரூ.106.53 | – |

## 13.) SDRF நிதி

மயிலாடுதுறை நகராட்சி **SDRF** நிதியின் கீழ் 4 பணிகள் ரூ.15.22 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 4 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு நெ.5 ஆனதாண்டவபுரம் சாலை சீரமைக்கும் பணி | ரூ.6.00 | ரூ.6.00 |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு நெ.26 ஆடு வதைக்கூட சாலை சீரமைக்கும் பணி | ரூ.1.60 | ரூ.1.60 |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு நெ.34 பெரியமரியம்மன் கோவில் சாலை சீரமைக்கும் பணி | ரூ.2.82 | ரூ.2.82 |
| 4 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு நெ.36 மாந்தோப்பு தெருவில் சாலை சீரமைக்கும் பணி | ரூ.4.80 | ரூ.4.80 |

## இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி 2021–2022

மயிலாடுதுறை நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதியின் கீழ் 4 பணிகள் ரூ.11.98 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 பணி வேலை நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட திருவாரூர் சாலையில் உள்ள சமுதாய கழிப்பறை பழுதுபார்க்கும் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி | ரூ.3.08 | – |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி ஆரோக்கியநாதபுரத்தில் உள்ள சமுதாய கழிப்பறை பழுதுபார்க்கும் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி | ரூ.3.30 | – |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி புது பேருந்து நிலைய சமுதாய கழிப்பறை பழுதுபார்க்கும் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி | ரூ.3.40 | – |
| 4 | மயிலாடுதுறை நகராட்சி கிட்டப்பா அங்காடியில் உள்ள சமுதாய கழிப்பறை பழுதுபார்க்கும் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி | ரூ.2.20 | – |

## 14. பாதாள சாக்கடை திட்டம் பற்றிய குறிப்பு:-

மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் ரூ.42 கோடி செலவில் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 20.1.2003 ஆண்டு முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ரூ.20 கோடி மத்திய அரசு மானியமாகவும், ரூ.15 கோடி மாநில அரசு மான்யமாகவும் ரூ.7.00 கோடி நகராட்சி பங்குத் தொகையாகவும் நிதி ஆதாரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரில் 87.343 கி.மீ. தூரம் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்களும், 8 இடங்களில் கழிவு நீரேற்று நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.. கழிவு நீரேற்று நிலையங்களில் பம்ப் செய்யப்படும் கழிவுநீர் இந்நகருக்கு கிழக்கே சுமார் 2.88 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ள ஆறுபாதி என்னும் கிராமத்தில் சுத்திகரிப்பு செய்வதற்காக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைக்கும் பணி 97% முடிவுற்று, மண்டலம் II, III, IV, V, VI, VII, VIII, VIIIA எட்டு பம்பிங் ஸ்டேசன் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் வீட்டு இணைப்பு குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மூலமாக 13624 வீட்டு இணைப்புகள் வழங்குவதற்கு திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்படி முடிக்கப்பட்டுள்ள பகுதிகளில் 10728 வீட்டு இணைப்புகள் வழங்கிட பட்டியல் பெறப்பட்டு மேற்படி மண்டல வாரியாக உள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு வீட்டு இணைப்பு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 31.03.2022 வரை 9970 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இணைப்புகள் வழங்கிட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## NULM நிதி

மயிலாடுதுறை நகராட்சி தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் 2020-2021 நிதியின் கீழ் பணி ரூ.72.00 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | NULM திட்டத்தின் கீழ் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உட்புற நோயாளிகளுடன் உடன் வருபவர் தங்கும் கட்டிடம் கட்டும் பணி. | ரூ.72.00 | 0 |

## கல்வி நிதி

மயிலாடுதுறை நகராட்சி கல்வி நிதியின் கீழ் பணி ரூ.5.20 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 21 சின்ன எரகலி தெருவில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் பழுது நீக்கம் பணி மேற்கொள்வது | ரூ.5.20 | – |

## 15–வது மத்திய நிதி குழு திட்டம் 2021–2022(TIED GRANT)

மயிலாடுதுறை நகராட்சி 15–வது மத்திய நிதி குழு திட்டம் (TIED GRND) நிதியின் கீழ் 8 பணிகள் **ரூ.144.00** இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளிலும் வேலை நடைபெற்று வருகிறது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு ரூ.லட்சத்தில்** | **செலவு ரூ.லட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | 10 HP– 1 No, 2 HP-1 No (தரங்கம்பாடி சாலை ஜெனிபர் ஸ்வீட் மற்றும் சித்தர்காடு) ஆகிய இடங்களில் உள்ள கழிவு நீர் உந்து நிலையங்களுக்கு தேவையான சென்ட்ரிக்கல் சீவர் பம்பு கொள்முதல் செய்யும் பணி | ரூ.20.00 | – |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 1 கே.கே.ஆர் நகரில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | ரூ.9.90 | ரூ.9.90 |
| 3 | 4 HP– 2 No (பூம்புகார் சாலை மற்றும் கல்லணை சாலை) ஆகிய இடங்களில் உள்ள கழிவு நீர் உந்து நிலையங்களுக்கு தேவையான சென்ட்ரிக்கல் சீவர் பம்பு கொள்முதல் செய்யும் பணி | ரூ.10.00 | – |
| 4 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 7, திம்மநாயக்கன் படித்துறையில் RRC CENTER கட்டும் பணி | ரூ.20.00 | – |
| 5 | 20 HP– 1 No, 4 HP-1 No சீர்காழி சாலையில் உள்ள கழிவு நீர் உந்து நிலையங்களுக்கு தேவையான சென்ட்ரிக்கல் சீவர் பம்பு கொள்முதல் செய்யும் பணி | ரூ.22.00 | ரூ.22.00 |
| 6 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 31 வண்டிப்பேட்டை முதல் வார்டு எண் 36 மாந்தோப்பு தெரு வரை குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | ரூ.22.10 | – |
| 7 | மயிலாடுதுறை நகராட்சி முடிகண்டநல்லூர் குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் 250 KVA ஜெனரேட்டர் சப்ளை செய்யும் பணி | ரூ.21.50 | ரூ.21.50 |
| 8 | மயிலாடுதுறை நகராட்சி முடிகண்டநல்லூர் குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் ஜெனரேட்டர் ஷெட் அமைக்கும் பணி | ரூ.18.50 | ரூ.18.50 |

## சுகாதாரா நிதி

மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் பணி ரூ.25.00 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 31 யாத்ரா நிவாஸ் வளாகத்தில் சுகாதார மையம் கட்டும் பணி. | ரூ.25.00 | – |

## 15–வது மத்திய நிதி குழு திட்டம் 20–21 (TIED GRANT)

மயிலாடுதுறை நகராட்சி 15–வது மத்திய நிதி குழு திட்டம் (TIED GRND) நிதியின் கீழ் 14பணிகள் ரூ.235.51 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 8 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 பணிகளிலும் வேலை நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவு நீர் உந்து நிலையம் எண் 3 அண்ணா வீதி முதல் அந்தோனியார் கோவில் தெரு வரை தற்காலிக PVC Casing Pipe அமைக்கும் பணி. | ரூ.9.75 | ரூ.9.75 |
| 2. | PS-4 ராஜேஸ்வரி மஹால் அருகில் ஏற்கனவே இருக்கும் உந்துநிலைய அமைப்பினை மாற்றி அமைக்கும் பணி. | ரூ.22.71 | - |
| 3. | 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு எண்ணிக்கை உள்ள வாகனத்தின் ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரம் விநியோகம் செய்யும் பணி. | ரூ.54.30 | ரூ.51.24 |
| 4. | மேன்ஹோலில் உள்ள வண்டல் மண்ணை சுத்தம் செய்வதற்காக எண்1 தூர்வாரும் இயந்திரத்தை விநியோகம் செய்யும் பணி. | ரூ.15.00 | ரூ.14.80 |
| 5 | மயிலாடுதுறை நகராட்சி 1 எண்ணிக்கை கொண்ட டிப்பிங் ஏற்பாட்டுடன் 2 Cum இலகுரக வர்த்தக வாகன வழங்குதல் மற்றும் விநியோகம் செய்யும் பணி. | ரூ.7.15 | ரூ.7.14 |
| 6. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 31 வண்டிப்பேட்டையில் BOV வாகனங்களுக்கு ஜார்ஜி இன் ஷெட் அமைக்கும் பணி | ரூ.9.90 | - |
| 7. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 27 பார்க் அவென்யூ சாலையில் BOV வாகனங்களுக்கு ஜார்ஜி இன் ஷெட் அமைக்கும் பணி | ரூ.9.90 | - |
| 8. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 18 தட்டாரத்தெரு, சமுதாயகூட வளாகத்தில் BOV வாகனங்களுக்கு ஜார்ஜி இன் ஷெட் அமைக்கும் பணி | ரூ.9.90 | - |
| 9. | மயிலாடுதுறை நகராட்சியில் குடிநீர் திட்டம் விடுபட்ட பகுதிகளுக்கு பகிர்மான குழாய் அமைக்கும் பணி | ரூ.21.00 | - |
| 10. | மயிலாடுதுறை நகராட்சியில் 26 எண்ணிக்கைகள் கொண்ட ஸ்லூயிஸ் வால்வு, பம்பிங் மெயின் இரட்டை காற்று வால்வுகள் பொருத்தும் பணி. | ரூ.6.00 | ரூ.6.00 |
| 11. | மயிலாடுதுறை நகராட்சியில் 125 HP திறன்கொண்ட மின் உபகரணங்களுடன் தலைமை நீரேற்று நிலையத்தின் டர்பைன் பம்ப் செட் வழங்கல் மற்றும் விநியோகம் செய்யும் பணி. | ரூ.36.55 | – |
| 12 | மயிலாடுதுறை நகராட்சி மாமரத்துமேடை, கே.கே.ஆர் நகரில் 3 எண்ணிக்கை கொண்ட 20.00 HP மூன்று கட்ட நீர்முழ்கிக் குழாய் விநியோகம் மற்றும் சரி செய்யும் பணி. | ரூ.1.35 | ரூ.1.35 |
| 13. | மயிலாடுதுறை நகராட்சி உந்து நிலையம் எண் 4-க்கு 125 KVA GENSET வாங்கும் பணி. | ரூ.12.00 | ரூ.12.00 |
| 14 | மயிலாடுதுறை நகராட்சி தரங்கம்பாடி சாலையில் PS-6,7 முதல் (வண்டிப்பேட்டை வரை) முதுகெலும்பு சாக்கடை II வரை தற்காலிக பம்பிங் மெயின் அமைக்கும் பணி. | ரூ.20.00 | – |

## 15–வது மத்திய நிதி குழு திட்டம் 20–21 (UNTIED GRANT)

மயிலாடுதுறை நகராட்சி 15–வது மத்திய நிதி குழு திட்டம் (UNTIED GRANT) நிதியின் கீழ் 4பணிகள் ரூ.85.12 இலட்ச மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அதில் 2 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 பணிகளிலும் வேலை நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | செலவு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 31 ல் மயூரநாதர் தெற்கு மடவிளாகம் மற்றும் தெற்கு மடவிளாகம் சந்தில் தார்சாலை அமைக்கும் பணி. | ரூ.25.00 | ரூ.25.00 |
| 2. | மயிலாடுதுறை நகராட்சியில் தோட்ட துண்டாக்கி இயந்திரம் வழங்கல் மற்றும் விநியோகம் செய்யும் பணி. | ரூ.20.00 | - |
| 3. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் 27- ல் பார்க் அவென்யூ சாலையினை தார்சாலையாக அமைக்கும் பணி. | ரூ.25.00 | ரூ.25.00 |
| 4. | மயிலாடுதுறை நகராட்சி ஆடுவதைக்கூடம் புதுப்பிக்கும் பணி | ரூ.15.12 | ரூ.15.12 |

## 15. பொது சுகாதாரம்:-

### மருத்துவ உதவி:-

இந்நகரில் 250 படுக்கை வசதிகளுடன் தந்தை பெரியார் அரசினர் மருத்துவமனை ஒன்றும், 27 தனியார் மருத்துவமனைகளும் இயங்கி வருகின்றன.

### நகராட்சி ஆயுர்வேத மருத்துவமனை:-

மருத்துவர் அலுவலர் பணியிடம் மற்றும் இதர பணியாளர் இல்லாததால் தொடர்ந்து ஆயுர்வேத மருத்துவமனை இயங்கவில்லை.

### தாய் சேய்நலம்:-

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின்கீழ் இயங்கும் நகர ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் இலவச மருத்துவம் வெளிநோயளிகளுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் இலவசமாக மகப்பேறு மருத்துவ சேவையும், கர்ப்பிணி பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி தொகை வழங்கப்படுகிறது.

1) நகராட்சி பகுதியில் அரசு நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் வெளி நோயாளியாக வந்து பயன்பெற்றவர்கள் = 56741
2) உள் நோயாளியாக பயன்பெற்றவர்கள் = 1913
(பிரசவம்) = 28

இதில் பெண் மகப்பேறு மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. 1 பயிற்சி பெற்ற சுகாதார செவிலியர் மற்றும் 1 ஆயா பணிபுரிந்து வருகிறார்கள்.

தாய்சேய் நல மருத்துவர் மற்றும் உதவியாளர் தடுப்பூசியும் போட்டு வருகின்றனர். அறிக்கையாண்டில் தடுப்பூசி போடப்பட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண் | இனம் | குறியீடு | 2021-2022 முடிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | பி.சி.ஜி | 730 | 723 |
| 2 | டி.பி.டி | 730 | 723 |
| 3 | போலியோ | 730 | 723 |
| 4 | மீசல்ஸ் | 730 | 723 |
| 5 | டி.டி. | 730 | 723 |

**நோய்களினால் இறந்தவர்களின் விவரம் வருமாறு.:-**

| | | |
|---|---|---|
| 1. | காலரா | இல்லை |
| 2. | சின்னம்மை | |
| 3. | பிளேக் நோய் | |
| 4. | ஜூரம் | |
| 5. | சீதபேதி | |
| 6. | தொத்துவியாதி | |
| 7. | இன்புளுன்சா | |
| 8. | எலிக்கடி | |
| 9. | மற்றக்காரணங்கள் | |
| | இறப்பு (மொத்தம்) | |

**பிறப்பு, இறப்பு பதிவு செய்தல்:-**

பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் பணியில் 3 துப்புரவு ஆய்வர்கள் பணிபுரிகின்றனர். இதில் தாய்சேய் நல விடுதியில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மருத்துவமனையின் மூலம் பிறப்பு 28 ஆகும். 2021-2022 ஆண்டில் மொத்த பிறப்பு 2796 ஆகும். இறப்பு பதிவு 622 இறந்து பிறந்தது 2 ஆகும்.

அறிக்கையாண்டில் மழை வெள்ளம் மற்றும் புயல் நாட்களில் தொற்று நோய்கள் பரவாவண்ணம் சுகாதார நடவடிக்கை எடுக்க பொது சுகாதார ஆய்வர்களாலும் மருத்துவ மனை பணியாளர்களாலும் தொற்றுநோய்கள் பரவாவண்ணம் முன் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**நோய்கள் :-**

அ) காலரா நோய் பாதிப்பு இல்லை.
ஆ) அம்மை நோய் பாதிப்பு இல்லை.
இ) பிளேக் நோய் பாதிப்பு இல்லை.

**யானைக்கால் நோய் மற்றும் கொசு ஒழிப்பு:-**

இந்நகரில் கொசு தடுப்பு (Antifilariya Scheme) திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரம் ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வாரம் முழுவதும் கொசுப்புழு ஒழிப்பு Bacticide மருந்து தெளிப்பதோடு இந்நகர் முழுவதும் fogging மெஷின் மூலம் கொசு ஒழிப்பு மருந்து மற்றும் டெக் மாலதியான்பைரத்திரன் எக்ஸாட் அடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கொசு மருந்து அடிப்பவர்கள் 9 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அறிக்கையாண்டில் இத்திட்டம் பராமரிப்புக்காக ரூ.43.84 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**துப்புரவு செய்தல்:-**

இந்நகரில் சேரும் குப்பைகளையும் தனியார் வீடுகளின் மூலம் சேரும் குப்பைகளையும் மற்றும் திடக்கழிவுகளையும் துப்புரவு செய்ய டிராக்டர் 2 கழிவுநீர் லாரி 1 மற்றும் 39 மூன்று சக்கர வண்டிகள், 10 தள்ளுவண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. 30 வார்டுகளில் வீடுவீடாக குப்பைகளை வாங்கும் பணி செய்யப்பட்டு வருகிறது. 11 வார்டுகளில் தனியார் மூலம் குப்பை சேகரிக்கப்படுகிறது. உரக்கிடங்கில் உரம் தயாரிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

பொது சுகாதார பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு அபாயகராமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு வழங்கப்பட்ட உரிமயாணை மொத்தம் 849 ஆகும். அறிக்கையாண்டில் உரிமையாணை கட்டணம் ரூ.222430/– வசூலிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ரூ.301805/– ஆகும்.

இந்நகரில் சேரும் குப்பைகளையும் தனியார் வீடுகளின் குடியீருப்பு வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் சேகரமாகும் குப்பைகளை தினந்தோறும் மக்கும் மக்காத குப்பைகள் என சேகரிக்கப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தூய்மை பணிகள் செய்திடுவதற்கு இலகுரக பேட்டரி வாகனங்கள் Light Commercial வாகனம் 6, டிப்பர் டிராக்டர் 2, டப்பர் லாரி 1, BOV பேட்டரி வாகனம் 36 பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகரில் சேரும் குப்பைகளை மக்கும் மக்காத குப்பைகளை உரமாக்கும் பணிக்காக புதியதாக 3 நுண்ணுயிர் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் தினசரி 29 டன் மக்கும் குப்பைகளை கொண்டு உரமாக்கும் பணிகள் தினந்தோறும் நடைபெற்று வருகிறது. மேலும், நகரில் OCC உரமாக்கும் மையம் 6 செயல்பட்டு கொண்டு இருக்கிறது. இவற்றில் தினசரி 197 கிலோ மக்கும் குப்பைகள் சேரித்து அவற்றிலிருந்து உரமாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொது சுகாதார பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு அபாயகராமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாணை மொத்தம் 827 ஆகும். அறிக்கையாண்டில் உரிமையாணை கட்டணம் ரூ.301805/- வசூலிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ரூ.299127/- ஆகும்.

**<u>திருவிழாக்களும், கண்காட்சிகளும்:-</u>**

மயிலாடுதுறை என்ற சீர்மிகு பெயர் வரக்காரணமான ஐப்பசி மாதம் காவேரி நதியில் கொண்டாடப்படுவதும், துலா உற்சவம் என்கிற கடைமுழுக்கு தமிழக அரசினரால் அறிவிப்பு செய்யப்பட்ட திருவிழா ஆகும். இத்துலா உற்சவம் 11.11.2021 முதல் 30.12.2021 வரை நகரின் மாயூரநாதர் கோவிலில் நடைபெற்றது. இத்திருவிழா காலத்திற்காக நகராட்சியினால் தற்காலிக கழிப்பிடங்கள் கட்டப்பட்டு துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டன. திருவிழா தொடர்பாக சாலையோர கடைகள் மற்றும் குத்தகை ஏலம் மூலம் ரூ. 3,58,017/- வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டு ரூ.3,48,009/- ஆகும். மேற்படி திருவிழாவிற்கு இருப்பில் உள்ள பொருள்கள் பயன்படுத்தப்பட்டன.

**<u>தீ அணைப்பு::-</u>**

இந்நகரின் கச்சேரி சாலையில் அமைந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் வளாகத்தில் தமிழக அரசு தீ அணைப்பு நிலையம் அமைந்துள்ளது. இத்துறையினர் நகரிலும் மற்ற சுற்றுப்புற கிராமங்களிலும் நேரிட்ட தீ விபத்தின் போது தீ அணைப்பு பணியினை செய்து சிறந்த சேவை புரிந்துள்ளார்கள்.

**<u>உணவு கலப்படம்:-</u>**

உணவு கலப்படம் சம்மந்தமாக உள்ள தொழில்களுக்கு உரிமையாணை வழங்குவது தொடர்பாக உணவு கலப்பட துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## <u>16. காய்கனி மற்றும் மீன் சந்தைகள்:-2021-2022</u>

இந்நகர் மன்றத்தின் எல்லைக்குள் ஒரு மீன் அங்காடியும், ஒரு காய்கனி அங்காடியும் உள்ளது. இவை பொது ஏலம் மூலம் மீன்மார்க்கெட் வசூலாக ரூ.359000/-ம் காய்கனி மார்க்கெட் மூலம் ரூ.389217/- வசூலிக்கப்படுகிறது.

1) மீன்மார்க்கெட் ஏல வசூல் உரிமம் - ரூ.3,59,000/-

2) திரு.வி.க.காய்கனி மார்க்கெட் ஏலம் - ரூ.3,89,217/-

## <u>17. பேருந்து நிலையமும், பேருந்து போக்குவரத்து வசதிகளும்:-</u>

| | |
|---|---|
| மறு ஏலம் விடப்பட்டது தொகை | : |
| அலுவலகம் மூலம் வசூல் | |
| 01.04.2021 முதல் 31.03.2022 வரை | : ரூ. 4,74,096/– |
| | ------------------------ |
| **கூடுதல் வசூல்** | **: ரூ. 4,74,096/–** |
| | ------------------------ |

இந்நகரின் பேருந்து நிலையம் காமராஜ் பேருந்து நிலையம் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இது நகரளவு எண்.113/1, 2எ, 3எ-ல் மொத்தம் 1.94 ஏக்கர் பரப்பில் உள்ளது. இப்பேருந்து நிலையம் பி வகுப்பு பேருந்து நிலையமாக அங்கீகாரம் பெற்று, மண்டல போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் அவர்களது ந.க.எண்.43946/2017/பி1, நாள்:22.02.2018 உத்திரவுபடி 19.02.2021 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம் கடைகளாக நகர்மன்ற தீர்மான எண்.9, நாள்:31.10.2016ன்படி மாற்றியமைக்கப்பட்டு பொது ஏலம்விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடைகள் 54ம் உணவு விடுதி 2ம் கட்டண கழிப்பிடம் ஒன்றும் கட்டண குளியலறை ஒன்றும் முன்பதிவு அறை 2 ஆகியவற்றுடன் இலவச சிறுநீர் கழிப்பிடம் ஒன்றும் குடிநீர் வசதிக்காக 2 குழாய் இணைப்புகளும் உள்ளன. இந்த பேருந்து நிலையத்திற்கு தினமும் 350 பேருந்துகள் வந்து செல்கின்றன. இப்பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் இந்நகரம் அடைந்துள்ள அபிவிருத்தியினை ஒட்டி பேருந்து நிலையம் போக்குவரத்து பயனுக்கும் பொது மக்களின் நடமாட்டத்திற்கு போதுமானதாக இல்லாமல் நெருக்கடி மிகுந்து காணப்படுவதினால் புதிய பேருந்து நிலையம் ஒன்றினை அதிக பரப்பளவு கொண்ட இடத்தில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதைய பேருந்து நிலையத்தில் வந்து போகும் பேருந்துகளுக்கான கட்டணம் தண்டும் உரிமையினத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் ரூ. 4,74,096/-ம் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடம் குளியலறை மற்றும் இதர குத்தகை இனங்களின் மூலம் ரூ.13,29,147/- கிடைக்கப்பெற்றுள்ளது.

## 18. வணிக வளாகங்கள்:-

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி கிட்டப்பா வணிக வளாக அங்காடியின் அடித்தளத்தில், பதினொரு கடைகளும், மேல் தளத்தில் பிரிண்டர் டிஜிட்டர் நிறுவனமும் கீழ்தளத்தில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் வாடகையில் உள்ளது. இதன் வாயிலாக கிடைக்கப்பெற்ற வருமானம் தற்போது வரை ரூ.19,30,920/- இது சென்ற ஆண்டு ரூ.5,50,380/- ஆகும்.

இந்நகராட்சியில் டாக்டர் வரதாச்சாரியார் பூங்காவிலும், குடியரசு பூங்காவிலும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.40.00 லட்சம் செலவில் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அங்காடி வணிகவளாகம் 31 கடைகள் கொண்டதாகவும், பழனிச்சாமி அங்காடி வணிகவளாகம் 18 கடைகள் கொண்டதாகவும் இரு வணிக வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இவ்வறிக்கை ஆண்டில் பழனிசாமி அங்காடி முதல் தளத்தில் 8 கடைகள் கட்டப்பட்டுள்ளது.

**இவ்விரு அங்காடிகளின் ஆண்டு கேட்பு விபரம் வருமாறு:-**

| வ.எண் | கடைகளின் பெயர் | 2020–2021 | 2021–2022 |
|---|---|---|---|
| 1 | மூவலூர் மூதாட்டி இராமமிர்தம் அங்காடி கடைகள் | 2408000/- | 2529540/– |
| 2 | பழனிச்சாமி அங்காடி கடைகள் | 1403000/- | 1403000/– |
| 3 | திரு.வி.க மார்க்கெட் வெளிப்புற கடைகள் | 578000/- | 578000/– |
| 4 | காவல் நிலையம் எதிர்புறம் உள்ள கடைகள் | 525780/- | 525780/– |
| 5 | இதர இனங்கள் | 195020/– | 195020/– |
| 6 | கூறைநாடு பேருந்து நிலைய கடைகள் | 182400/– | 182400/– |
| 7 | விஜயா தியேட்டர் எதிர்புறம் உள்ள கடைகள் | 170500/– | 170500/– |

## 19. ஓராண்டு குத்தகை இனங்கள்:-

**கிட்டப்பா அங்காடியின் பின்பறமுள்ள சைக்கிள் நிறுத்துமிடம்:-**

இந்நகராட்சிக்குச் சொந்தமான கிட்டப்பா அங்காடியின் பின்புறம் மேட்டுத் தெருவில் சைக்கிள் நிறுத்துமிடம் அமையப் பெற்றுள்ளது. 2020-2021-ல் :ரூ.2,55,788/– முழுவதும் வசூலிக்கப்பட்டு உள்ளது. இவ்வறிக்கை 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.1,27,502/–ல் முழுவதும் வசூலிக்கப்பட்டு உள்ளது.

**கட்டணக் கழிப்பிடங்கள்:-**

நகராட்சியால் கீழ்க்கண்ட இடங்களில் நான்கு கட்டணக்கழிப்பிடம் மற்றும் குளியலறை பொதுமக்கள் வசதிக்காக பராமரிக்கப்பட்டு வருகிறது.

1) பேருந்து நிலையம் 2) திரு.வி.க.மார்க்கெட், 3) அவையாம்பாள்புரம் விஜயா தியேட்டர் அருகிலுள்ள கட்டண கழிப்பிடம் அறிக்கை ஆண்டில் கட்டண கழிப்பிடங்களின் மூலம் ரூ.18,67,247/- வசூலாகி உள்ளது. சென்ற ஆண்டு ரூ.46,70,505/- ஆகும்.

**வாடகை கார்கள் நிறுத்துமிடம்:-**

நகராட்சியின் காமராஜ் பேருந்து நிலையத்தின் மேற்புறத்தில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஏலம் ரூ.30,000/- மற்றும் வாடகை கார்கள் ரூ.44,500/- நிறுத்த தனித்தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டு குத்தகைக்கு ஏலம் விடப்பட்டது. இதன் வாயிலாக நகராட்சிக்கு அறிக்கையாண்டில் வருமானம் ரூ.74,500/- வசூலிக்கப்பட்டுள்ளது.

**ஆடுவதை செய்யுமிடம்:-**

மீன் மாாக்கெட் சாலையில் நகராட்சியால் ஆடுகள் வதை செய்யும் இடம் பராமரிக்கப்பட்டு வரப்பெறுகிறது. கால்நடை மருத்துவர் முன்னிலையில் ஆடுகள் வதை செய்யப்படுகிறது. இங்கு ஆடு ஒன்றிற்கு ரூ.20/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. இதன் வாயிலாக நகராட்சிக்கு ரூ.1,52,000/- வரப்பெற்றுள்ளது. கடந்த ஆண்டு ரூ.1,58,762/- வரப்பெற்றுள்ளது.

**சாலையோர மரங்கள் மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் உள்ள மரங்கள் குத்தகை வரவுகள்:-**

மரங்கள் - ஆராய குளம் மேல்கரை பலன்தரும் தென்னை மரங்கள் குத்தகை வரவு ரூ.3,100/-

வரதாச்சாரியார் பூங்கா, சின்ன ஏரகலித்தெருவில் இந்நகராட்சிக்குச் சொந்தமான சாலைகளின் ஓரம் உள்ள புளியமரங்கள் மற்றும் சித்தர்காடு குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பலன் தரும் மா, புளி, தென்னை போன்றவைகளின் மகசூல் உரிமையை வருடா வருடம் குத்தகை விடப்படுகிறது.

## 20. தொழிற்சாலைகள்:-

தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 16 தொழிற்சாலைகள் மின்சாரத்தில் இயங்கி வருகின்றன. சுகாதார ஆய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டு வரப்பெறுகிறது.

## 21. பூங்காக்களும், பொழுதுபோக்கு வசதிகளும்:-

**1) இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இரண்டு பூங்காக்கள் பராமரிக்கப்படுகின்றன.**

1) டாக்டர் வரதாச்சாரியார் பூங்கா, 2) கூறைநாடு குமரன் பூங்கா 3) ஹாஜியார் நகர் பூங்கா 4) சுப்பரமணியபுரம் பூங்கா 5) பெசன்ட் நகர் பூங்கா மேலும் பொதுமக்கள் பயனுக்காக டாக்டர் வரதாச்சாரியார் பூங்கா அருகில் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் ஒரு வாசகசாலையும் பராமரிக்கப்படுகிறது. இதில் தினசரி நாளேடுகள், வார, மாத இதழ்கள் வாங்கப்பட்டு பொதுமக்கள் படிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

## 22. நகரமைப்பு நிர்வாகம்:-

நகரின் கட்டிட கட்டுமான பணிகளை கவனித்திடவும், நகரமைப்புத் திட்டங்களை செயல்படுத்திடவும், நகரமைப்புப்பிரிவு இயங்கி வருகிறது. இப்பணிகளைக் கவனித்துவர கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1). நகரமைப்பு அலுவலர், முதல் நிலை | (1) | |
| 2) நகரமைப்பு ஆய்வர்கள் | (2) | |
| 3) உதவியாளர் | (1) | |
| 4) அலுவலக உதவியாளர் | (1) | காலியிடம் (2) |

மயிலாடுதுறை நகரத்தில் கொண்ட தனித்த உள்ளூர் திட்ட குழுமம் செயல்பட்டு வந்தது. நிதியாண்டில் உள்ளாட்சி மன்ற தேர்தல் நடைபெறாததால் நகராட்சி ஆணையர் அவர்கள் தனி அலுவலர் ஆக நியமனம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் தனி அலுவலரை உள்ளூர் திட்ட குழும தலைவர் என்பதால் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி தனி அலுவலரால் வழங்கப்பட்டு வருகிறது.

**இந்நகராட்யில் அங்கீகரிக்கப்பட்ட விரிவு மேம்பாடு திட்டம் நான்கு உள்ளது. அதன் விரபம்:-**

1. பட்டமங்கல விரிவு நகரமைப்புத் திட்டம்.
2. வார்டு எண்.2. நகரமைப்புத்திட்டம்.
3. பட்டமங்கலம் மேற்கு அபிவிருத்தித் திட்டம்.
4. பட்டமங்கலம் மேற்கு பகுதி நகரமைப்புத்திட்டம்.

இந்த திட்டங்கள் 1973ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டன. இதனை இன்றைய நிலைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களைக் கேட்டுக்கொண்டதில் அவர்களும் உரிய நடவடிக்கை எடுத்து ஆவண செய்வதாக தனது கடிதம் ந.க.எண்.15350/97/எப்1 நாள்:21.10.1997-ல் கூறியுள்ளார்கள். அதன்பேரில் மேற்படி நான்கு திட்டங்களுக்கும் மாற்றியமைக்கப்பட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் திட்ட ஒப்புதலோடு இயக்குநர் அவர்களின் இனக்கத்திற்கு 01.11.99ல் அனுப்பப்பட்டுள்ளது. அரசால் இணக்கம் அளிக்கப்பட்ட தமிழக அரசிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பட்டமங்கலம் மேற்கு பகுதி மற்றும் வார்டு-11 நகரமைப்பு திட்டங்கள் பிரசுரம் செய்யப்பட்டு இறுதி ஒப்புதல் பெறப்பட வேண்டிய நிலையில் உள்ளது. நகர்மன்ற பதவி காலம் முடிவடைந்து விட்டதால் தேர்தல் நடைபெற மேலும் 1 முதல் 12 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதில் 1 முதல் 6 வரை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்புதுணை இயக்குநர் மூலம் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவையாவும் வரைவு நிலையில் உள்ளன. மேலும் இந்நிலையில் விரிவு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் திட்ட எண்கள் 9, 10, 11, 12 ஆகியவைகளுக்கு சம்பந்தப்பட்ட இடத்தின் உரிமையாளர்களை அழைத்து ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்க மயிலாடுதுறை பாம்ஸ் திருமண

மண்டபத்தில் 27.12.2006ம் தேதியில் ஆலோசனைகூட்டம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் அனைவரும் கலந்து கொண்டனர். இதனில் பெறப்பட்ட ஆட்சேபனைகள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருச்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. மயிலாடுதுறை விரிவு அபிவிருத்தி திட்டம் 12 தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29ன்கீழ் இறுதி ஒப்புதல் வழங்க உள்ளூர் திட்டக் குழுமத்தில் 27.06.2008 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு 04.07.2008ல் அனுப்பப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டம் நடைமுறையில் உள்ளது. தற்போது நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் மயிலாடுதுறை நகராட்சி அமைகிறது.

**நகர முழுமைத்திட்டம்:-**

இந்நகராட்சி முழுமைத் திட்டம் 1986 ஆண்டு தயார் செய்யப்பட்டது. தற்போது 13 ஆண்டுகளுக்கு மேல் ஆகி உள்ளது. தற்போது இந்நகரம் வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளதால் புதிய முழுமைத்திட்டம் தயார் செய்யப்பட்டு அரசு ஆணை 535 நாள்: 24.12.96ல் இணக்கம் அளிக்கப்பட்டு நில உரிமையாளரிடம் இருந்து ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளூர் திட்டக் குழுமத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாணை எண்.100 வீ.வ. மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:21.03.2005-ல் மறு ஆய்வு முழுமைத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**1.அனுமதியற்ற மனைப்பிரிவுகள்:-**

மயிலாடுதுறை நகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அரசாணை எண்.78, நாள்:04.05.2018 மற்றும் அரசாணை எண்.172, நாள்:13.10.2017 மற்றும் அரசாணை நிலை எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை, நாள்:05.02.2019. நகர் ஊரமைப்பு அனுமதி விண்ணப்பங்கள் ஆகியவற்றிற்கு புதிய கட்டமைப்புகள் மற்றும் புதிய விதிகள் நகர்மன்ற ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**2. கட்டிட அனுமதி**

தமிழ்நாடு ஒருங்கினைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 அரசாணை(நிலை) எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை(ந.நி-1), நாள்:04.02.2019ன்படி வரையறுக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் மற்றும் மனைப்பிரிவு அனுமதி கீழ்கண்டவாறு அனுமதியற்ற மனைபிரிவுகள் வரன்முறைப்பட்டுத்தப்பட்டு கீகண்டவாறு மனைகள் முறைப்படுத்தப்பட்டு கட்டங்கள் வசூல் செய்யப்பட்டு நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**வரன்முறைப்படுத்தப்பட்ட மனகைள் மற்றம் கட்டணம் வசூல் செய்யப்பட்ட விரபம்:–**

| மொத்த அனுதியற்ற மனைகள் பிரிவுகள் | முறைப்படுத்த வேண்டிய மணைகள் | வரன் முறைப்படுத்தப்பட்ட மனைகள் | வரன் முறைப்படுத்த வேண்டிய மனைகள் | வரன்முறைப்படுத்தப்பட்டு கட்டணம் வசூல் செய்யப்பட்டது | அனுமதி கட்டணம் வசூல் செய்யாதது |
|---|---|---|---|---|---|
| 22 | 547 | 386 | 161 | 143.23 லட்சம் | - |

**ஆக்கிரமிப்பு:-**

நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி சாலைகள், நெடுஞ்சாலைத்துறை சாலைகள் மற்றும் நகராட்சி பேருந்து நிலையத்தில் இருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன. நகராட்சி பராமரிப்பில் உள்ள சாலைகள் மற்றும் அனைத்து இடத்திலும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன.

**கட்டிட விண்ணப்பங்கள்**

1. அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் நிலுவை .. 7
2. அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட மனுக்கள் .. 68
3. அறிக்கை ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது .. 70
4. அறிக்கை ஆண்டில் அனுமதி மறுக்கப்பட்டது .. 0

5) நிலுவை .. 5

**கட்டிட அனுமதி வழங்கப்பட்ட விவரம் 2021-2022**

| குடியிருப்பு | குடியிருப்பு அல்லாதது | மொத்தம் |
|---|---|---|
| 55 | 15 | 70 |

## 23. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்(2 + 4) பள்ளி செல்லா குழந்தைகள் சத்துணவு திட்டம்:-

தமிழக அரசு சமூக நலத்துறை அரசு ஆணை எண்.2131, நாள்: 03.09.1982ம் நாளிட்ட அரசாணையின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 2 முதல் 4 வயது வரையில் உள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் 15.09.1982 முதல் இலவச சத்துணவு வழங்கும் திட்டம் இந்நகராட்சியில் அமுல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின்படி இந்நகாட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 சத்துணவு மையங்கள் அமைக்கப்பட்டு இதன் மூலம் சிறார் பராமரிப்பும் சத்துணவு வழங்கப்பட்டு வந்தது. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறை அரசாணை எண்.270 நாள்:13.10.1995ன்படி 24 சத்துணவு மையங்களும் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்திற்கு - (ஐ.சி.டி.எஸ்.) 31.03.1996 முதல் மாற்றம் செய்யப்பட்டது.

**புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். பள்ளி சத்துணவு திட்டம் ( 5+9)**

தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 07.09.1982-ஆம் நாளிட்ட 1379ஆம் எண்ணுள்ள அரசாணையின் கல்வி துறையினரால் செயல்படுத்தப்பட்ட முதலமைச்சர் சத்துணவு திட்டத்தை (5 வயது முதல் 9 வயது வரை) 15.09.1982ஆம் ஆண்டு முதல் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் செயல்படுத்திட உத்தரவு பிறக்கப்பட்டது. இவ்வாணையின்படி பள்ளி சத்துணவு திட்டத்திற்கு அமைப்பாளர் தஞ்சை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் 27.01.1983ஆம் தேதியிட்ட ந.க.எண். 62236/82ம் நாள் செயல்முறைகளின்படி 16 பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். சத்துணவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்திட ஒவ்வொரு பள்ளிசத்துணவு மையத்திற்கும் தலா ஒரு சமையலரும் ஒரு உதவியாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாணவர் வருகை குறைவு காரணமாக ஔவையார் நகராட்சி தொடக்கப்பள்ளி சத்துணவு மையம் புதுத்தெரு 04.03.1999-லும் டபீர்தெரு மற்றும் புளியன்தெரு தொடக்கப்பள்ளிகள் 08.10.2002 முதலும் புதுத்தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி மூடப்பட்டதாலும் தற்போது 13 நகராட்சி தொடக்கப்பள்ளி சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறையின் அரசாணை எண்.251/நாள்:20.09.1994ஆம் ஆண்டு தேதியிட்ட உத்திரவின்படி தற்போதைய திட்டம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 5+9 மற்றும் 10 வயது முதல் 14 வயதுக்குள் உள்ளோருக்கு உரிய மேல்நிலைப்பள்ளி சத்துணவுத்திட்டம் தமிழக அரசின் (முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துறை) அரசாணை எண்.1222, நாள்:26.07.1984ன்படி 10 வயது முதல் 14 வயது வரையிலான பள்ளி மாணவர்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம் 1509.1984 முதல் விரிவு படுத்தப்பட்டு நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேல்நிலைப்பள்ளி சத்துணவுத்திட்டத்தினை செயல் படுத்திட 2 பள்ளிகளுக்கும் ஒவ்வொரு பள்ளி சத்துணவு மையத்திற்கும் தலா ஒரு அமைப்பாளர் ஒரு சமையலர் ஒரு உதவியாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் இந்நகராட்சியில் மொத்தம் 2 மையங்களும் சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறையின் அரசாணை எண்.251 நாள்:10.09.1994-ம் தேதியிட்ட உத்திரவுகளின்படி தற்போது இத்திட்டம் சமூகநலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறையின் கீழ் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை நிலை எண்.148 சமூகநலம் (ம) சத்துணவு திட்டம் பிரிவு நாள்:23.08.2007ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்ட மையங்கள் சமூக நலத்துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது.

தற்போது 01.04.2007 முதல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் செயல்பாட்டிற்கான மான்யங்கள் (ம) ஒய்வூதியப் பயன்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துருக்கள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்டு மான்யத்தொகைகள் பெறப்பட்ட செலவிடப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பணிபுரியும் சத்துணவு திட்ட கணக்கர் மற்றும் உதவியாளருக்கு மாத ஊதியம் வழங்கப்பட்ட வகையில் 10/2013 முதல் 12/2018 வரை செலவினம் மேற்கொள்ளப்பட்ட தொகை ரூ.2546337/– ஐ இந்நகராட்சிக்கு வழங்கிடகோரி நாகை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு முன்மொழிவுகள். ந.க.எண்.814/2019/சி4, நாள்:13.03.2019ல் – அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 24.வழக்குகள்:-

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டு துவக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | - | 44 |
| அறிக்கை ஆண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | - | 7 |
| நகராட்சியால் தொடரப்பட்ட வழக்குகள் | - | - |
| நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் | - | 51 |
| **மொத்த வழக்குகள்** | - | **51** |
| அறிக்கை ஆண்டில் முடிவுற்ற வழக்குகள் | - | 17 |
| அறிக்கை ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் | - | 34 |

## 25. வரி இனங்கள்:-

மக்கள் தொகையில் எல்லா சொத்து வரிவிதிப்புகளின்கீழ் வரிவிகிதம் ரூ.197/- ஆகும். இது சென்ற ஆண்டு ரூபாய் 197 ஆக இருந்தது. மொத்த வரி விதிப்பு ஆகும். ரூ.180/- வருட வாடகை மதிப்பிற்கு கீழ் உள்ள குடிசை இனங்களுக்கு வீட்டு வரி தள்ளுபடி செய்து ஏற்கனவே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2021-2022ம் ஆண்டின் நடப்பு கேட்பு ரூ.452.19 லட்சம் ஆகும். ரூ.351.29 லட்சம் வசூலிக்கப்பட்டு நிலுவை ரூ.100.90 லட்சம் உள்ளது. வசூல் சதவிகிதம் 77.69% இதில் வழக்கு இனங்களில் நடப்பு நிதியாண்டில் 11.79 லட்சங்களும் மற்றும் அரசு கட்டிடங்களுக்கான நடப்பு நிதியாண்டில் 12.99 லட்சங்களும் ஆக மொத்த 24.78 லட்சங்கள் ஆகும்.

**2021-2022ம் அறிக்கை ஆண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வசூல் செய்யப்பட்ட விபரம்:-.**

| வரி இனம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| சொத்துவரி | 860.15 | 445.32 | 414.83 |
| காலிமனை வரி | 315.09 | 14.99 | 300.10 |
| குடிநீர் கட்டணம் | 334.38 | 99.88 | 234.50 |
| தொழில் வரி | 210.05 | 96.69 | 113.36 |
| வரியில்லா இனம் | 356.85 | 231.08 | 125.77 |
| பாதாள சாக்கடை | 463.15 | 95.17 | 367.98 |
| **கூடுதல்** | **2612.69** | **1167.29** | **1445.40** |

## 26. கடன்கள்:-

## MAYILADUTHURAI MUNICIPALITY

LOANS AND ADVANCES

| Name of the Municipalities | Name of the scheme work with D.P.Code | Name of the lending ( NTADCL. TWAD. EAP. TNIUFSL | Year of loan sanctioned by the lending agency | Loan amount (Rs.in lakhs) | The total repayment of loan upto 31-03-2022 | | Total Outstanding loan as on date |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Principal | Interest | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | 7 |
| Mayiladuthurai | **SDRF** | **TNFIDCO** | **2020-2021** | **360.00** | **27.00** | **13.06** | **606.34** |

## 27. கணிப்பொறி பிரிவு:-

இந்நகராட்சியின் மின் ஆளுமை பணிகள் 1999-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்-II (TNUDP-II) மூலமாக செயல்படுத்தப்பட்டது.

இந்நகராட்சியில் இரண்டு கணிப்பொறி பணியிடங்கள் உருவாக்கப்பட்டு 1) உதவித் திட்ட அமைப்பாளராக திரு.வே.முரளிதரன் அவர்கள் 01.04.2019 முதல் 31.03.2020 வரையிலும், 01.04.2021 முதல் 31.03.2022 முடிய புள்ளி விவரக்குறிப்பாளர் திருமதி.கே.செல்வி அவர்களும் இந்நகராட்சியின் கணினி மையத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 01.01.1933-ல் இருந்து பிறப்பு பதிவுகளும் மற்றும் 01.01.1960ல் இருந்து இறப்பு பதிவுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு 01.07.2000 முதல் பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் கணிப்பொறி வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் கணக்கு பதிவு முறைகள் அனைத்தும் கணினி வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணங்கள் 01.08.2003 முதல் கணிப்பொறி வாயிலாக நேரடியாக பொது மக்களிடம் இருந்து பெறப்பட்டு வருகின்றது. இந்நகராட்சிக்குட்பட்ட கூறைநாடு பகுதியில் கூடுதல் வரிவசூல் மையம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் வரி மற்றும் வரியில்லா இனங்கள் செலுத்துவதற்கும் பொதுமக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அலுவலக கடிதப்போக்குவரத்து அனைத்தும் மின்னஞ்சல் (இ-மெயில்) மூலமாக கடந்த 2000-ம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும் பொதுமக்கள் குறைகளை மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டு தொடர்புடைய பிரிவிற்கு அனுப்பப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகிறது.

ஜனவரி – 2016 (CWBS) Centralized Web Based Software மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளின் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. கட்டிட அனுமதி விண்ணப்பங்களை Online மூலம் விண்ணப்பம் செய்யும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் தனியாக இணைய தளம் TNUDP-II மூலம் தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் இந்நகராட்சி தொடர்பான அனைத்து தகவல்களையும் இணையதளம் மூலம் அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அனைத்தும் நேரங்களிலும் வரி மற்றும் வரியில்லா இனங்களின் தகவல்களை இணையதளம் மூலம் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி விவரங்களை இணையதளம் மூலம் அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களை பொதுமக்கள் வீட்டில் இருந்தபடியே இணையதளம் வாயிலாக செலுத்தவும், மேற்படி பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகளை இணையதள மூலமாக பெறுவதற்கு வசதி செய்துரப்பட்டுள்ளது.

**இணையதள முகவரி:**

https://tnurbanepay.tn.gov.in

**இந்நகராட்சியின் இணையதள முகவரி**

http://tnurbantree.tn.gov.in/mayiladuthurai

**மின்னஞ்சல் முகவரி:**

commr.mayiladuthurai@tn.gov.in

## 28. முதலீடுகள்:-

**அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் கீழ்கண்டவாறு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளது.**

1. குடிநீர் நிதி – ரூ. 50 63,291/–
2. கல்வி நிதி – ரூ. 72,89,601/–
3. குடிநீர் நிதி – ரூ. 11, 57,553/–

## 29. பாதாள சாக்கடை திட்டம் பற்றிய குறிப்பு:-

மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ரூ.42.00 கோடி செலவில் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 20.1.2003 ஆண்டு முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ரூ.20.00 கோடி மத்திய அரசு மான்யமாகவும், ரூ.15.00 கோடி மாநில அரசு மான்யமாகவும் ரூ.7.00 கோடி நகராட்சி பங்குத் தொகையாகவும் நிதி ஆதாரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரில் 87.343 கி.மீ. தூரம் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்களும், 8 இடங்களில் கழிவு நீரேற்று நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.. கழிவு நீரேற்று நிலையங்களில் பம்ப் செய்யப்படும் கழிவுநீர் இந்நகருக்கு கிழக்கே சுமார் 2.88 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ள ஆறுபாதி என்னும் கிராமத்தில் சுத்திகரிப்பு செய்வதற்காக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைக்கும் பணி 97% முடிவுற்று, மண்டலம் II, IV, V, VIII, VIIIA, III, VII, VI எட்டு பம்பிங் ஸ்டேசன் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் வீட்டு இணைப்பு குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மூலமாக 13624 வீட்டு இணைப்புகள் வழங்குவதற்கு திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்படி முடிக்கப்பட்டுள்ள பகுதிகளில் 10728 வீட்டு இணைப்புகள் வழங்கிட பட்டியல் பெறப்பட்டு மேற்படி மண்டல வாரியாக உள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு வீட்டு இணைப்பு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 31.03.2022 வரை 9970 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இணைப்புகள் வழங்கிட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 30. பொது:-

இந்நகராட்சி பொது மக்களுக்கு அடிப்படை தேவைகள் குடிநீர் வினியோகம், விளக்கு வசதி, சாலை வசதி, தெருக்களை சுத்தப்படுத்துதல் மற்றும் இதர பொதுசுகாதாரப் பணிகளை நல்ல முறையில் அளித்து வருகிறது. அரசினால் வழங்கப்படும் கடன் உதவி தொகைகள், மான்ய தொகைகளைக் கொண்டு பொது மக்களின் நலனுக்காக பணிகளை நல்ல முறையில் செய்து கொடுத்துள்ளது.

நகராட்சி நிர்வாகம் செவ்வனே நடைபெற அவ்வப்போது தேவையான ஆலோசனை வழங்கிய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சை அவர்களுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கும் எனது பணிவான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சியின் நிர்வாகம் பொதுவாக நல்லமுறையில் நடைபெற நன்கு ஒத்துழைப்பை அளித்த பொறியாளர், நகர்நல அலுவலர், நகரமைப்பு அலுவலர், மேலாளர், கணக்கர் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் ஆண்டிலும் இந்நகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் இயங்கிட பூரண ஒத்துழைப்பு நல்கிடவேண்டும் என்ற கோரிக்கையினையும் வைக்கின்றேன். இதே போன்று நிர்வாக நடைமுறைகளிலும் நல்ல ஒத்துழைப்பை அளித்து வரும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டு எனது நிர்வாக அறிக்கையினை முடிக்கிறேன்.



ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி.